## ஆதிதிராவிடர் பழங்குடி இன மக்களுக்கு

# தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டது!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேச்சு!



சென்னை, ஆக.29-

ஆதிதிராவிடர் பழங்குடி இன மக்களுக்கு தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டது என்று- பேரவையில் சமூக நீதித்துறை மானிய கோரிக்கை விவாதத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு குறிப்பிட்டார்.

சட்டமன்றத்தில் நேற்று சமூக நீதித்துறை மானிய கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது, இதில் சார்பில் கே.என். நேரு அவர்கள் பங்கேற்று பேசியதாவது:-

இங்கு பேசிய அமைச்சர் நீண்ட நெடிய சொற்பொழிவுவையாற்றி அமர்ந்துள்ளார்.

சமூக நீதித்துறையில் ஒரு குறிப்பிட்ட பணம் செலவு செய்ய வில்லை என்று சிஏஜி அறிக்கையை குறிப்பிட்டு காட்டுகிறார், எந்த ஒரு அரசாக இருந்தாலும், எந்த ஒரு துறையாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கும்போது, அதற்கு நிர்வாக ரீதியாக சில சங்கடங்கள் இருக்கும், ஒரு சில நேரங்களில் நீதிமன்றத்தில் தடையாணை பெறுவார்கள், அதுபோன்ற நேரங்களில் அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யாமல் நின்று விடும், அடுத்த ஆண்டு அது தொடரும், இது நடைமுறை,

எனவே சிஏஜி அறிக்கையை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளலாமே தவிர, பணிகளை கைவிட்டு விட்டோம் என்று அர்த்தம் கிடையாது, ஆதிதிராவிட மக்களுக்கு செய்யக்கூடிய பணிகளை செய்யாமல் விட்டு விட்டோம் என்று அர்த்தம் அல்ல, ,

எங்களுக்கெல்லாம் ஒரு பெருமை என்னவென்றால் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலந்தொட்டு கடந்த திராவிட மாடல் ஆட்சியின் இறுதி வரை பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற நன்மைகளை செய்துள்ளோம், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறையை உருவாக்கியதே திமுக தான், அது மட்டுமல்ல கடந்த ஆட்சி காலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களை அமைச்சர்ககளாக நியமிக்கப்பட்டார்கள், குறிப்பாக உயர் கல்வித் துறைக்கு ஆதிதிராவிடர் ஒருவரை அமைச்சராக நியமித்தது திமுக தான்.

நீங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் தான் ஆகிறது, இந்த ஆட்சி ஓராண்டு நீடித்தால் ( ஒரே கூச்சல் குழப்பம்) , அதாவது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒன்றிய அரசாங்கம் சிஏஜி அறிக்கை சமர்ப்பிப்பார்கள், அப்பொழுது தெரியும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, எவ்வளவு செலவு எவ்வளவு செலவு செய்ய வில்லை என்று தெளிவாக தெரிந்து விடும்.


இந்த அவையில் ஆரோக்கியமான விவாதத்தை விட்டு விட்டு, உங்கள் ஆட்சியில் இது செய்யவில்லை, சிஏஜி-யில் குறை உள்ளது என்று திசை திருப்புகிறீர்கள், இது தவறான பாதைக்கு வழி வகுக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## நிர்வாகம் தெரியாதவர்கள் ஆட்சி செய்தால்,

# பொருளாதார வளர்ச்சி எல்லாம் வராது; விலைவாசி தான் உயரும்!

## தி.மு.க. இளைஞரணி விமர்சனம்!




திராவிடமாடல் ஆட்சியில் 3,77% ஆக இருந்த விலைவாசியை, இந்த CircusSarkar–இல் 5,45% ஆக உயர்த்தி, சாமானிய மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறது. நிர்வாகம் தெரியாதவர்கள் ஆட்சி செய்தால், பொருளாதார வளர்ச்சி எல்லாம் வராது; விலைவாசி தான் உயரும்!

# சட்டப் பேரவையில் தொழில்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் – நாகர்கோவில் எஸ்.ஆஸ்டின் பேச்சு!

3ஆம் பக்கத் தொடர்ச்சி

2021ல் தமிழ்நாட்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்கின்றபோது சிப்காட் கிட்டத்தட்ட 32,525 ஏக்கரில் 24 சிப்காட் நிறுவனங்களோடு நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 12 புதிய மாவட்டங்களில் தொழில் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, இன்றைக்கு கிட்டத்தட்ட 54 தொழிற்பூங்காக்கள், சிப்காட் 50,059 ஏக்கரில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதுவும் எங்களுடைய ஐந்தாண்டுகால சாதனை, வேறு எங்குமே நிகழ்த்தவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் ஆட்சியில்தான் 2021 ஜூலை 20 ஆம் தேதி முதலில் Single window portal 2.0 என்ற திட்டம் துவங்கப்பட்டது. கிட்டத்தட்ட 24 துறைகள் சார்ந்த 100 சேவைகள் ஒரு தொழில் துவங்க ஒரு நிறுவனம் வருகிறது என்று சொன்னால், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், அனைத்து சேவைகளையும், அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் பெறக்கூடிய வகையில் இன்றைக்கு நீங்கள்கூட 3.0 என்று ஒன்றை துவங்கப்போவதாக சொல்லியிருக்கிறீர்கள். அதை digitalஆக நீங்கள் போடப்போவதாக சொல்லியிருக்கிறீர்கள். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. இருந்தாலும் அதை முதன்முதலில் நாங்கள் துவங்கியதன் காரணமாகத்தான் இவ்வளவு முதலீடுகளை ஈர்க்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே இடத்தில் அனுமதியை கேட்டவுடனேயே கொடுத்த காரணத்தால்தான் விரைவாக அந்த MoUக்கள் எல்லாம் இன்றைக்கு முதலீடுகளாக தமிழ்நாட்டில் மாற்றப்பட்டது என்பதை நான் இங்கே பதியவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றிய அரசின் புள்ளி விவர துறையின்படி இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில்தான் வேலைக்குச் செல்லும் பெண்களுடைய சதவிகிதம் மிகவும் அதிகம். தொழில் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே manufacturing sectorல் வேலை பார்க்கின்ற பெண் தொழிலாளர்கள் 43 சதவிகிதத்தினர் தமிழ்நாட்டில் மட்டுமே பணிபுரிகின்றார்கள் என்ற சாதனையை தமிழ்நாடு அரசு படைத்துள்ளது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிலாளர் நலன், கட்டுமான அனுமதி, வணிக நுழைவு மற்றும் நில நிர்வாகம் ஆகிய பிரிவுகளில் சிறப்பான சீர்த்திருத்தங்களை மேற்கொண்டதற்காக தமிழ்நாட்டிற்கு Top achiever என்ற விருது 2025 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அதுபோல, கடலோர மாநிலங்கள் பிரிவில் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக தமிழ்நாடு Achiever அந்தஸ்தை பெற்றது. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இந்தியாவின் முதல் Multi modal logistics parks அமைப்பதற்கான முயற்சிகளுக்காக இந்த அங்கீகாரம் தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம் உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கின்றன. உலக முதலீட்டு மன்றக் கூட்டத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாற்றத்தை வெற்றிகரமாக ஊக்குவித்து, பசுமை ஹைட்ரஜனை மின்சார வாகனத் துறையில் பில்லியன் கணக்கான முதலீடுகளை ஈர்த்ததற்காக ஐநா சபை ‘சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு விருதை’ தமிழ்நாட்டிற்கு வழங்கியது.

அதேபோல, ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதார அமைச்சகத்தால் Asia Oceania பிராந்தியத்திலேயே சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகமை விருது அன்றைக்குத் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது. இப்படி எண்ணற்ற விருதுகளைப் பெற்று, எங்கள் ஆட்சியில் தொழில் துறை இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற அந்தஸ்தைப் பெற்றது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாமே உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயே நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். இவையெல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த இந்தத் திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டன. இந்த இந்த விருதுகள் எல்லாம் வழங்கப்பட்டன. இவ்வளவு SIPCOT தொடங்கப்பட்டன. இவ்வளவு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன என்பதையெல்லாம் சொல்லி யிருக்கின்றீர்கள். அதை நோக்கிய உங்களுடைய பயணமும், கூடுதலாக எதை எதைச் செய்யவேண்டு மென்று குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும்கூட, இதை நோக்கிய பயணம் இருக்கும் என்று சொன்னீர்கள். ஏற்கெனவே, இந்த ஆட்சிப் பொறுப்பேற்று கடந்த 138 2026 இல் ஒரு ** முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை கூட்டினீர்கள். Pressஐயெல்லாம் உள்ளே விடவில்லை. அந்த மாநாட்டில் 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு அதில் ரூ.67,452 கோடி முதலீடு வந்ததாக சொல்லியிருக்கிறீர்கள்.

அதேபோல, 4.6.2026 மற்றும் 9.7.2026 இல் L&T Group மற்றும் Vikram Solar நிறு வனங்கள்மூலம் சுமார் ரூ.33,000 கோடி முதலீடு வந்ததாகவும், நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். நான் இங்கே கேட்பதெல்லாம் 97 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அதில் எத்தனை நிறுவனங்கள் புதிதாகப் போடப்பட்டன? எங்களுடைய கணக்குபடி இதிலே கிட்டத்தட்ட 75, 85 சதவிகிதத்திற்குமேல் உள்ள நிறுவனங்கள் ஏற்கெனவே எங்களுடைய ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்கி அல்லது எங்கள் ஆட்சிக்கு முன்பே தொழிலைத் தொடங்கி இங்கே முதலீடு செய்து, தொழில் செய்பவர்களினுடைய ஒரு expansion ஆக நீங்கள் எடுத்துள்ளீர்கள். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், புதிய தொழிலை, இங்கே கொண்டுவந்ததாகக் கிட்டத்தட்ட 10 சதவிகிதம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் அதற்கு விளக்கம் இருந்தால் பதிலுரையில்கூடச் சொல்லலாம். மீதி எல்லாம் திராவிட மாடல் ஆட்சியில் நம்முடைய அரசாங்கத்தால் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்த முதலீட்டாளர்களுடைய நிறுவனங்களுடைய expansion ஆகத்தான் நான் இந்த ரூ.1 இலட்சம் கோடி முதலீட்டைப் பார்க்கிறேன். இதில் பெரும்பாலான நிறுவனங்களுடைய தலைவரும் தொழில் துறை அமைச்சரும் பேசி. . . (குறுக்கீடுகள்)

நாங்கள் 2021 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, கொரோனா உச்சத்தில் இருந்த நேரம். அந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதுகூட, கிட்டத்தட்ட மூன்று மாத காலத்திலே ரூ.44,36,000 கோடி திட்ட முதலீட்டை நாங்கள் கொண்டுவந்தோம். இன்னும் அதில் ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீங்கள் முதலீட்டாளர்கள் மாநாட்டை கடந்த 13 ஆம் தேதி போட்டீர்கள். ஜூலை மாதம் 31 இல் முதல் காலாண்டுக்கான தொழில் முதலீட்டு, 4 States, நான்கு மாநிலத்திலே ஒரு ஒப்பீடு வெளிவந்தது. அதையெல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது ஏற்கெனவே இருந்த காலாண்டு. அதாவது, சென்ற 2021 இல் இருந்த காலாண்டிற்கும், தற்போது 2026 இல் இருக்கின்ற முதல் காலாண்டிற்கும் இருக்கக்கூடிய வித்தியாசம். ஒப்பீடு. அதில் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்றால், கர்நாடக மாநிலத்தில் முந்தைய காலாண்டைவிட வளர்ச்சி விகிதம் 232.53 சதவிகிதம் ஜூலை 31, மூன்று மாத காலாண்டிற்குள் அதிகரித்திருக்கிறது. கேரள மாநிலத்தில் வளர்ச்சி விகிதம் 294.94 சதவிகிதம் முந்தைய காலாண்டைவிட தொழில் முதலீட்டு வளர்ச்சி அதிகரித்திருக்கிறது. இவையெல்லாம் நம் Stateல் தேர்தல் நடக்கும்போது தேர்தல் நடந்த மாநிலங்கள். மேற்கு வங்கத்தில் முந்தைய காலாண்டைவிட வளர்ச்சி விகிதம் 199.58 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் நம்முடைய அமைச்சர் அவர்கள் கேட்டதைப் போல அந்த மூன்று மாத காலத்திலே ஜூலை 31 வரை நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால், தமிழ்நாட்டில் முந்தைய காலாண்டைவிட 74.48 சதவிகிதம் சரிந்துள்ளது. சுமார் 200, 300 சதவிகிதம் மற்ற மூன்று மாநிலங்களில் உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் சரிந்திருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் எங்களுடைய. . . (குறுக்கீடு)

எந்த பத்திரிகை என்பதையோ அல்லது பத்திரிகை செய்தியையோ நான் குறிப்பிடவில்லை. சாதாரணமாக உறுப்பினர் அண்ணன் அவர்கள் தெரிவித்ததுபோன்று, எங்களுக்கு ஏதேனும் தகவல் கிடைத்தால் அவற்றை அமைச்சர்களிடம் தான் கேட்டறிய முடியும். அவர்களிடம்தான் அரசாங்கம் இருக்கிறது; அமைச்சர் அவர்களின் பதிலுரை சாயங்காலம் இருக்கிறது. எனவே, நான் தெரிவித்த இந்த ஒப்பீடு குறித்து அவர்கள் ஆய்வு செய்து, பதிலுரையின்போது நீங்கள் சொன்னது தவறு என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. நான் ஒன்றும் குற்றச்சாட்டே சொல்லவில்லை. குற்றச்சாட்டாக ஏதும் சொல்லவில்லை. (குறுக்கீடு)

தொழில் துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்து 3 மாதங்கள் மட்டும்தான் ஆகின்றன; அதற்குள்ளாகவே இவ்வளவு குற்றச்சாட்டு சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். குற்றச்சாட்டாக சொல்லவில்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்து 3 மாதங்கள் மட்டும்தான் ஆகின்றன; அது உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. அதில் எதுவுமே இல்லை. Long Term திட்டங்கள் ஏதும் இல்லை. ஆனால் நீங்கள் அதில் அறிவித்திருக்கிறீர்கள்; 2036 ஆம் ஆண்டில் நாங்கள் 1.5 trillion US Dollar பொருளாதார மாநிலமாக மாற்றுவோம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். நீங்கள் மாற்றினால், நாங்கள் வரவேற்போம். ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், எங்கள் தலைவர் அவர்கள் 2021 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபொழுது, 2030 ஆம் ஆண்டில் 1 trillion US Dollar பொருளாதாரமாக இலக்கை நாங்கள் உயர்த்துவோம் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள். அதை நோக்கித்தான் எங்கள் ஆட்சியின் பயணம் சென்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்ற முடிந்தது. தற்போது நாங்கள் ஆட்சியைத் தொடர்ந்திருந்தால், 2030 ஆம் ஆண்டில் அந்த சாதனையை நாங்கள் ஈட்டியிருப்போம்; 1 trillion US Dollar பொருளாதார இலக்கைக் கொண்டுவந்திருப்போம். (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆலோசனைகள் சொல்லலாம்; அறிவுரைகளை சொல்லலாம்; கருத்துகளைச் சொல்லலாம். ஆனால், அவர்களை வாழ்த்த முடியாது. என்ன இருக்கிறதோ அதைதான் நாங்கள் சொல்ல முடியும். அதுதான் எதிர்க்கட்சியின் கடமை.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் 1.5 trillion US Dollar செய்வோம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். தற்போது எங்கள் ஆட்சி அமைந்து, எங்கள் தலைவர் முதலமைச்சராக இருந்து, ஏற்கெனவே தொழில் துறை அமைச்சராக டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தற்போது தொழில் துறை அமைச்சராக இருந்திருந்தால், 2036 ஆம் ஆண்டில் 2 trillion US Dollar பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வந்திருப்போம் என்ற உத்தரவாதத்தை நான் தருகின்றேன். நீங்கள் நன்றாக உழையுங்கள்; நாங்கள் யாரும் உங்களுக்கு எதிராக இல்லை; நன்றாக உழையுங்கள்; கடுமையாக உழைத்தால்தான் தொழில் துறையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியும்; அப்படி எங்கள் முன்னாள் முதலமைச்சரும், தொழில் துறை அமைச்சரும் முதலீட்டாளர்களை சந்தித்து, கடுமையாக உழைத்த காரணத்தினால்தான், இந்த உயரத்தை, உச்சத்தை எட்டியிருக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது). எனவே அதைப் போன்று நீங்களும் உழையுங்கள். முடிந்தால் ஓரளவிற்கு, எங்களது இலக்கில் ஒரு பாதியையாவது எட்டுவதற்கு நீங்கள் முயற்சி செய்வீர்களானால், அதனை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மணியடிக்கப் பெற்றது) அமைச்சர் அவர்கள், முதலீட்டாளர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், தவறாக நினைக்க மாட்டார்களா, தவறாக சிந்திக்க மாட்டார்களா, இப்படி எல்லாம் பேசுகிறீர்களே என்று குறிப்பிட்டார்கள்.

நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் விதி 110ன்கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை இந்த அரசு, . . .இரத்து செய்திருப்பதாக அறிவித்திருந்தார்கள். இதைப் பார்த்து முதலீட்டாளர்கள் தவறுதலாக நினைப்பார்களா, நினைக்க மாட்டார்களா? அதுதான். இன்றைக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதிலேயே பரந்தூர் விமான நிலையம்தான் மிக முக்கியமானதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, கிட்டத்தட்ட 2000 ஏக்கர் நிலத்திற்குமேல் எடுக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விதி எண் 55ன்கீழ் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஏனென்றால், சுரங்கத் துறை. சுரங்கத்தைத் தோண்டினால், தோண்டத் தோண்டு வந்துகொண்டேதான் இருக்கும். அதனால், அதற்குள் போக நான் விரும்பவில்லை. Minesஐ பொருத்தவரை, என்னுடைய மாவட்டத்தில் அணுக் கனிமச் சுரங்கம், அமைச்சர் அவர்களே,

உங்களிடம்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். அணுக் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கான கால அவகாசத்தை இந்த அரசாங்கம் ஓராண்டுக் காலம் நீட்டித்துக் கொடுத்ததனால், அந்தப் பகுதியில் மிகப்பெரிய ஒரு கொந்தளிப்பு, பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களெல்லாம் முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வந்து பார்த்தார்கள். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கால அவகாசம் என்பது 10.6.2026லேயே முடிந்துவிட்டது. நீங்கள் ஆட்சிக்கு வந்த புதிது. அதனால், அதைத் தவறுதலாகக் கூட நீங்கள் விட்டிருக்கலாம். எப்படி விட்டீர்கள் என்று (குறுக்கீடு) ராண்டுக் கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுத்து விட்டீர்கள். இன்னும் ஓராண்டுக் காலம் இருக்கிறது. எல்லா அனுமதியையும் நாங்கள் நிறுத்தி வைத்திருந்தோம். எனவே, அந்தத் திட்டம், அந்த அரசாணை இரத்து செய்யப்படுமா அல்லது சுற்றுச்சூழல் அனுமதியை அந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு, ஓராண்டுக்கு வழங்காமல் நிறுத்தி வைத்து, தானாகவே அந்த அனுமதி காலாவதியாவதற்கு நீங்கள் உதவியாக இருப்பீர்களா என்பதை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய EB Minister அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இலஞ்சத்தை எதிர்த்து முதலமைச்சர் அவர்கள் சாட்டையைச் சுழற்றியிருக்கிறார். . .

இவ்வளவு நேரம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்து அதன்மூலமாக, பல்வேறு கருத்துகளை, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக, பல்வேறு அமைச்சர்கள் மூலமாக, இந்த நாட்டு மக்கள் அறிவதற்கு வாய்ப்பினை வழங்கிய உங்களுக்கு என்னுடைய பணிவான நன்றியைச் சொல்லி, எனது தொகுதி சம்பந்தமாக சில கோரிக்கைகள் இருக்கிறது, அதை உங்களிடத்தில் கொடுத்துவிடுகின்றேன். அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு கழக உறுப்பினர் எஸ். ஆஸ்டின் உரையாற்றினார்.

# பத்திரிகையாளர் - எழுத்தாளர் ந.வினோத் குமார் மறைவு!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல்!



சென்னை, ஆக.29-

பத்திரிகையாளரும், எழுத்தாளருமான ந.வினோத் குமார் அவர்கள் நேற்றுமுன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:

பத்திரிகையாளரும் எழுத்தாளருமான திரு. ந.வினோத் குமார் அவர்கள் மறைவெய்திய செய்தி வருத்தமளிக்கிறது.

தமிழரசு இதழில் வெளிவந்த தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனைகளையும் சாதனைகளையும் முக்கிய நூலாகத் தொகுத்தவர். அவரது திராவிட இயக்க வரலாறு தொடர்பான படைப்புகள் முக்கியமானவை.

அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.